**<u>அசல் வழக்கு எண்.17/2018</u>**

**<u>தேதி: 11.03.2025.</u>**

**<u>வா.சா.1:</u> 22.09.2023 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணைக்கு 3 மற்றும் 5வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

**<u>சாட்சி பெயர்</u>- திருமதி. சாவித்திரி, த/பெ. ராமசாமி**

**<u>3 மற்றும் 5வது பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

நான் இந்த வழக்கை பாக பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராமு நாயுடு என்பவர் என் அண்ணன். ராமு நாயுடு என்பவர் இறந்துவிட்டார். அவரின் சட்டப்படியான வாரிசுகளான 2 முதல் 7வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்துக்கள் அனைத்தும் கோபால் நாயுடு என்பவரின் உழைப்பால் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

அனைத்து தாவா சொத்துக்களும் கூட்டு குடும்ப சொத்துக்களாக தான் இருந்தது என்றால் சரிதான். கோபால் நாயுடு என்பவருக்கு 3 ஆண் மற்றும் 3 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை மட்டும் கோபால் நாயுடு அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் பெயரில் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். கோபால் நாயுடு என்பவரின் வாரிசு என்ற முறையில் ராமு நாயுடு என்பவருக்கு 1/6 பங்கு உரிமை உடையவர் என்றால் சரிதான். ராமு நாயுடு என்பவர் இறந்துவிட்டதால் அவரது சட்டப்படியான வாரிசுகளான 2 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளுக்கு ராமு நாயுடுவின் பங்கு

சேரக் கூடியது என்றால் சரிதான்.

மற்ற பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.